செ.வெ.எண்: 336/2016 நாள்: 07.06.2016

# பத்திரிக்கை செய்தி

## மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கன்னியாகுமரி மாவட்டம்

### தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கம்:

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் வறுமை கோட்டிற்கு கீழ் ஏழ்மை நிலையில் வாழும் மக்களை கண்டறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை நோக்கமாகும்.

### தொகுதி வழிநடத்துநர்களின் பணிகள்:

கிராமப்புறங்களில் மகளிர் சுய உதவி குழுக்களை ஆரம்பித்தல் சுய உதவி குழுக்களின் அடிப்படை புள்ளி விபரங்களை சேகரித்தல், சுய உதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை அமைத்தல், மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளுதல், அரசு வழங்கும் நலத்திட்டங்களை பெற ஊராட்சிகளில் ஊராட்சி மன்ற தலைவரால் நடத்தப்படும் கிராம சபாவில் சுய உதவிக்குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் கலந்து கோரிக்கைகளை வைத்து கிராமசபா ஒப்புதல் பெறுதல் மற்றும் ஒத்ததொழில் குழுக்களை ஆரம்பித்து தொழிலினை மேம்படுத்த பொருளாதார கடன் வழங்குதல் போன்றவைகள் ஆகும்.

மேற்படி செயல்களை செயல்படுத்த வட்டார வாரியாக தொகுதி வழிநடத்துநர்களை நியமனம் செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதன்படி தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட தொகுதி அலுவலகங்களில் காலியாக உள்ள தொகுதி வழிநடத்துனர் பணியிடங்களுக்கு மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு மட்டும் தற்காலிக அடிப்படையில் புதிய தொகுதி வழிநடத்துனர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | தொகுதி அலுவலகத்தின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அகஸ்தீஸ்வரம் | தேரேக்கால்புதூர் | 1 |
| 2 | குருந்தன்கோடு | கக்கோட்டுத்தலை | 1 |
| 3 | தக்கலை | ஆத்திவிளை | 1 |

**<u>தொகுதி வழிநடத்துனர்களுக்கான தகுதிகள்</u>**:

1. **கல்வித்தகுதி**: குறைந்தது மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. கணினி இயக்க அனுபவமுள்ள பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3. சுய உதவிக்குழு உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

4. **வயது**: விண்ணப்பிக்கும் நாளில் 21 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

5. சுய உதவிக்குழுவின் அலுவலக நிர்வாகத்தில் ஏதேனும் ஒரு பொறுப்பில் உள்ளவராக இருக்க வேண்டும்.

6. திட்டத்தினை செயல்படுத்த ஊராட்சியில் உள்ள அனைத்து இடங்களுக்கும் பயணம் செய்ய விருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும்.

7. கைபேசி வைத்திருப்பவரும் அதனை இயக்கி குறுந்தகவல்(SMS) அனுப்பவும், பெறவும் திறனுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

8. இருசக்கர வாகன உரிமம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்கண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை **10.06.2016-ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள்** திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, பூமாலை வணிக வளாகம், வடசேரி பேருந்து நிலையம் அருகில், நாகர்கோவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>அலுவலக முகவரி:</u>**

திட்ட இயக்குநர்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
பூமாலை வணிக வளாகம்,
வடசேரி பேருநது நிலையம் அருகில்,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.
தொலைபேசி எண்:04652-272275 / 272449.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**